குளோரி லில்லி

1. லில்லி புழு, பாலிடெல்லா குளோரியோசா

தாக்குதலின் அறிகுறி:

- இளம்பருவ புழுக்கள் இலைகளின் பச்சையத்தை உண்ணும்
- வளர்ந்த புழுக்கள் தாவரங்களின் கடிண தண்டுகளை மட்டும் விட்டுவிட்டு இலைகளை எல்லாம் உண்டு முழுவதுமாக சேதப்படுத்திவிடும்

பூச்சியின் விபரம்:

- முட்டை - வெள்ளையாகவும் சிறியதாகவும் காணப்படும்
- புழு - தலை கரும்வெளுப்பாகவும் உடம்புப்பகுதி கருப்பு நிறமாகவும் காணப்படும்
- அந்துப்பூச்சியின் முன்இறக்கையில் வெள்ளை மற்றும் கருநீல நிறத்தில் காணப்படும்

கட்டுப்படுத்தும் முறை:

- வேப்பம் எண்ணெய் 0.5 சதவிதம் அல்லது வேப்பங்கொட்டைச்சாறு 5 சதவிதம் தெளிக்கவும்
- புழுக்களை சேகரித்து அழித்துவிடவும்

2. சிவப்பு கம்பளிப்புழு, அம்சாக்டா லேக்டினியா

சேதத்தின் அறிகுறி:

- புழுக்கள் இலைகளை முழுவதுமாக சேதப்படுத்திவிடும்

- பருவ காலத்திற்கு பின் சேதப்படுத்தும்

**கட்டுப்படுத்தும் முறை:**

- புழுக்களை கையால் பொறுக்கி அழிக்கவும்
- முட்டை குவியல்களை சேகரித்து அழிக்கவும்
- கோடை உழவு செய்ய வேண்டும்
- புழுக்களை தீ மூட்டம் போட்டு அழிக்கலாம்
- கார்பரில் 2.5 கிலோ / ஹெக்டேர் எடுத்து 625 லிட்டர் நீரில் கலந்து தெளிக்கலாம்
- நச்சுப்பொறி வைத்து கட்டுப்படுத்தலாம்

3. **அரைக்காவடிப்புழு, புளுசிய சிக்னெட்டா**

**சேதத்தின் அறிகுறி:**

- புழுக்கள் இலைகளை உண்ணும்
- தாவரங்களில் இலைகள் இல்லாமல் ஆக்கிவிடும்

**பூச்சியின் விபரம்:**

- புழு பச்சை நிறத்திலும அதன் உடம்புப் பகுதியில் பழுப்பு நிறத்திலும் காணப்படும்
- அந்துப்பூச்சி - பழுப்பு நிறத்திலும் அதன் முன்னிறக்கையில் வெள்ளை கோடுகளும் காணப்படும்

**கட்டுப்படுத்தும் முறை:**

- புழுக்களை கையால் வேகரித்து அழித்துவிடவும்

- வேப்பங்கொட்டைச்சாறு 5 சதவிதம் அல்லது வேப்பம் எண்ணெய் 0.5 சதவிதம் தெளிக்கவும்

4. **இலை கொத்துப்புழு , அரகிப்ஸ் மைக்கசேனா**

**சேதத்தின் அறிகுறி:**

- இலைகளை கொத்தாக சேர்த்து, இலையின் அடிப்பகுதியை உண்ணும், இலைக்காம்பு, காய்களையும் உண்ணும்

**கட்டுப்படுத்தும் முறை:**

- பேப்பங்கொட்டைச் சாறு 5 சதவிதம் அல்லது வேப்பம் எண்ணெய் 0.5 சதவிதம் தெளிக்கவும்